| | | | |
|---|---|---|---|
| Headline | FRIM against proposal to turn forest into highway | | |
| MediaTitle | Malaysian Nanban (Sunday) | | |
| Date | 02 Mar 2014 | Color | Full Color |
| Section | News | Circulation | 60,000 |
| Page No | 17 | Readership | 419,000 |
| Language | Tamil | ArticleSize | 171 cm² |
| Journalist | NULL | AdValue | RM 1,078 |
| Frequency | Weekly | PR Value | RM 3,233 |



# வனப் பகுதியை நெடுஞ்சாலையாக்க பிரிம் எதிர்ப்பு

கோலாலம்பூர், மார்ச் 2- மலேசிய வன ஆராய்ச்சி நிறுவன (பிரிம்) சட்ட ஆட்சி எல்லைக்கு உட்பட்டு தேசியத் தலைநகரின் ஓரத்தில் அமைந்துள்ள 515 ஹெக்டேர் காட்டுப் பகுதியை நெடுஞ்சாலையாக மாற்றும் ஒரு திட்டத்திற்கு எதிரான ஆட்சேப நடவடிக்கையை பிரிம் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.அவ்வனப் பகுதியின் குறுக்கே ஒரு நெடுஞ்சாலை நிறுவும் திட்டம் கடந்தாண்டு பிப்ரவரியில் விவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அண்மையில் அத்திட்டம் மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது என பிரிம் தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் அப்துல் லத்திப் மொஹ்மட் கூறியுள்ளார்.எனினும், அத்திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகள் குறித்து கருத்துரைக்க அவர் மறுத்துவிட்டார். கடந்தாண்டு அத்திட்டம் குறித்த பேச்சு எழுந்த



பிறகு பிரிமின் 99 விழுக்காட்டு பணியாளர்கள் அத்திட்டத்திற்கு எதிராக கடந்தாண்டு மார்ச்சில் ஆட்சேப விண்ணப்பத்தில் கையொப்பமிட்டனர். அதையடுத்து அவ்விஷயம் காணாமல் போனது என்றார் அவர்.எனினும், சம்பந்தப்பட்ட தரப்புகள் அந்த நெடுஞ்சாலைத் திட்டத்தை மீண்டும் முன்மொழிவதாக பிரிமிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து கலந்துபேச பிரிம் வரும் செவ்வாயன்று கூட்டம் நடத்தும் என்றார் டாக்டர் அப்துல் லத்திப். நேற்று சனிக்கிழமையன்று இங்கு டத்தாரான் பிரிமில் ஊடகத் துறையைப் பாராட்டும் வகையிலான ஒரு நிகழ்ச்சியில் டாக்டர் அப்துல் லத்திப் கலந்துகொண்டார். அந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் மேற்கண்ட விவரங்களைச் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இதனிடையே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வைப் பெருக்கும் வகையில் பொது ஊடகங்கள் முக்கியமானதொரு பங்கினை ஆற்ற வேண்டும்.அதன் மூலம் வனம், வனம் சார்ந்த உயிரினத் தொகுதியை வரும் தலைமுறைகள் பெற இயலாததற்கு சமுதாயத்தின் மீது பழி கூறல் வராது என அப்துல் லத்திப் தமதுரையில் குறிப்பிட்டார்.

-பெர்னாமா

Powered by: iSENTIA